1979 ஏப்ரல் 20]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்— விடைகள் முடிவுற்றன.

குறிப்பு.—(ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி இடம் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரி பார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.)

(2) உரிமைப் பிரச்சினைகள்.

(அ) தொழிலாளர் நலத்துறை அமைச்சர்மீது (தீர்ப்பு).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 1979ஆம் ஆண்டு மார்ச் மாதம் 24ஆம் நாள் அன்று மாண்புமிகு உறுப்பினர் திரு. க. சுப்பு அவர்கள் மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் அவர்கள்மீது அவை உரிமை மீறல் குறித்த பிரச்சினையை எழுப்ப அனுமதி கோரி அறிவிப்பைக் கொடுத்து 1979ஆம் ஆண்டு மார்ச் மாதம் 27ஆம் நாள் அன்று அதைப் பேரவையில் எழுப்பி, திரு. சுப்பு அவர்களும் மாண்புமிகு அமைச்சர் அவர்களும் கருத்துத் தெரிவித்துள்ளார்கள்.

பொள்ளாச்சி குவாலிடி மில்லில் நடந்த நிகழ்ச்சிகளுக்குக் கேரள உயர்நீதிமன்றத் தீர்ப்பு மேற்கோளாகக் காட்ட முடியாது என்று தெரிந்திருந்தும், அத்தீர்ப்பின் ஒரு பகுதியை மட்டும் அவையின் கவனத்திற்குக் கொண்டு வந்தார் என்பது உறுப்பினர் அவர்களின் குற்றச்சாட்டு; இது அவைக்குத் தரப்பட்ட தவறான தகவல் என்பது மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் வாதம்.

மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் அவர்கள் விளக்கம் அளிக்கும் வகையில் பின்வருமாறு கூறியுள்ளார் :

'' ஒத்திவைப்புத் தீர்மானத்தின்மீது பேசும்போது அந்த மில்லில் சட்டம் ஒழுங்கு பிரச்சினை ஏற்படக் காரணமாக இருந்த 80 தொழிலாளர்களைக் கைது செய்யும்படி ஏற்பட்ட சூழ்நிலையைத்தான் குறிப்பிட்டேன். அமைதியாக உள்ளிருப்பு வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டிருந்த 24 தொழிலாளர்கள் கைது செய்யப்படவில்லை என்றும் குறிப்பிட்டிருந்தேன். தொழிலாளர்கள் சத்தியாக்கிரகம், வேலை நிறுத்தங்களில் ஈடுபட்டிருக்கும் போது எந்தெந்த சந்தர்ப்பங்களில் போலீசாரைத் தலையிட அழைக்கலாம் என்பதுபற்றி குறிப்பிட்டிருந்த கேரள உயர்நீதிமன்றத் தீர்ப்பு ஒன்றினையும் இது சம்பந்தமாக எடுத்துக் காட்டியுள்ளேன். உயிர் அல்லது உடைமைகளுக்கு உடனடியாக

ஆபத்து விளையும் என்ற சூழ்நிலையில் அவைகளைத் தவிர்க்கும் பொருட்டு வேண்டிய அளவு போலீசார் தலையிடலாம். இதே நியதிதான் குவாலிடி மில் விஷயத்திலும் பின்பற்றப்பட்டது'' என்று விளக்கமாகக் கூறியுள்ளார்.

இந்த ஒத்திவைப்புத் தீர்மானத்தை முதலில் திரு. சுப்பு அவர்கள் கொடுத்தபோது அது சட்டம் ஒழுங்கு பற்றியது என்பதால் அதற்கு அனுமதி மறுக்கப்பட்டது. ஆனால் திரு. சுப்பு அவர்கள் மீண்டும் என்னிடம் வந்து, இது தொழிலாளர்கள் பற்றியது என்றும், மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் அவர்கள் பதில் கூறினால் போதுமென்றும், தொழிலாளர் நலத்துறை அமைச்சரும் இதற்கு இசைந்திருப்பதாகவும் தெரிவித்த பிறகே, மீண்டும் அனுமதி அளிக்கப்பட்டது. தொழிலாளர் பிரச்சினை என்று கூறிவிட்டுப் பிறகு, சட்டம், ஒழுங்கு குறித்து எழுப்பியதனால் இந்த நிலை ஏற்பட்டது.

ஒரு உயர்நீதி மன்றத்தில் அளிக்கப்பட்ட தீர்ப்புக்கு ஏற்பத் தான் அரசு நடந்து கொண்டிருக்கிறது என்று அமைச்சர் கூறுகிறார். அந்தத் தீர்ப்பு இந்தத் தொழிற்சாலையிலுள்ள நிலைக்குப் பொருந்தாது என்று திரு. சுப்பு கூறுகிறார். இது அவரவருடைய தனிப்பட்ட அபிப்பிராயமாக இருக்கலாம். மேலும் ஒரு சாராரின் சட்ட உரிமைகள் பாதிக்கப்படுகிறது என்று யாரேனும் கருதுவார்களேயானால் அச்சாராருக்கு நமது அரசியல் அமைப்புச் சட்டத்தில் அவர்களது அடிப்படை உரிமைகளைக் காத்துக் கொள்ள நீதிமன்றங்களை அணுகுவதற்கு இடம் இருக்கிறது. இவற்றிற்கெல்லாம் இந்த அவையின் மூலமாகத் தீர்வு காண இயலாது.

மேலும் இதுபோன்று கருத்து வேறுபாடு எழக்கூடிய பொருள் பற்றி உரிமை மீறல் பிரச்சினை என்று எடுத்துக் கொள்வோமானால், உரிமை பிரச்சினையின் முக்கியத்துவம் குறைந்து விடும். எனவே, இதைக் கருத்தில் கொண்டு மிக முக்கியமான பிரச்சினைகளையே உரிமை மீறல் பிரச்சினைகளாகக் கொண்டு வர வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

திரு. சுப்பு அவர்கள் எழுப்பிய பிரச்சினையில் எந்தவிதமான அவை உரிமைப் பிரச்சினையும் எழவில்லை என்பது எனது முடிவு.